## களம் காணும் கழகக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து

# திருச்சி, கரூரில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இன்று பிரச்சாரம்!

## மாபெரும் பொதுக்கூட்டங்களில் உரையாற்றுகிறார்!

**தமிழ்நாடு முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.**

**இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (மார்ச் 31 ஆம் தேதி) திருவாரூரில் தொடங்கி பரப்புரை மேற்கொண்டார்.**

**தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதற்கட்டமாக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், ஊரான திருவாரூரில் பரப்புரையை தொடங்கினார். தொடர்ந்து இன்று திருச்சி, கரூரில் பரப்புரையை மேற்கொள்கிறார்.**



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

**01.04.2026 (புதன்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | **திருச்சி** **உழவர் சந்தை** (பொதுக்கூட்டம்) | திருச்சி மேற்கு, திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர் திருவரங்கம், மணப்பாறை, முசிறி, துறையூர் |
| மாலை 5 மணி | **கரூர்** **ராயனூர்** (பொதுக்கூட்டம்) | அரவக்குறிச்சி, கரூர், கிருஷ்ணராயபுரம், குளித்தலை |

**02.04.2026 (வியாழக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | **ஈரோடு** **சித்தோடு** (பொதுக்கூட்டம்) | பவானிசாகர், ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி, பெருந்துறை, அந்தியூர், கோபிசெட்டிபாளையம், ஈரோடு கிழக்கு, பவானி |
| மாலை 5 மணி | **கோவை** **கொடிசியா மைதானம்** (பொதுக்கூட்டம்) | சூலூர், கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் தெற்கு, சிங்காநல்லூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, வால்பாறை |

**குறிப்பு :** கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



திருச்சி மேற்கு தொகுதியில் தி,மு,க, சார்பில் போட்டியிடும் அமைச்சர் கே.என்.நேரு சாஸ்திரி ரோடு பகுதியில் இருந்து பிரச்சாரத்தை தொடங்கினார். தில்லைநகர், ரஹ்மானியபுரம், வாமடம் உள்ளிட்ட பகுதிகளில் அவர் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.அப்போது பெண்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றனர். அவருடன் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், விஜயலட்சுமி கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் டோல்கேட் சுப்பிரமணி, காஜாமலை விஜய், கமால் முஸ்தபா நாகராஜ், வழக்கறிஞர் கவியரசன் மணிவண்ண பாரதி அந்தோணி சுரேஷ் ,முத்து பழனி, சோழன் சம்பத், திருநாவுக்கரசு எம் ஆர் எஸ் குமார், இளையராஜா உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தலைவர் கலைஞரின்

# திருவாரூருக்குப் புறப்பட்டுவிட்டேன்!

### தேர்தல் பரப்புரை தொடங்குவதற்கு முன் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, ஏப். 1-

தேர்தல் பரப்புரைப் பயணம் மேற்கொள்ள புறப்படுவதற்கு முன், கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், தலைவர் கலைஞரின் திருவாரூருக்குப் புறப்பட்டு விட்டேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**தேர்தல் பரப்புரைப் பயணத்தைத் தொடங்க, தலைவர் கலைஞர் பிறந்த திருவாருருக்குப் புறப்பட்டுவிட்டேன்...**

**மக்களுடன் இரண்டறக் கலக்கும் இப்பயணங்களின் வாயிலாக உங்களைச் சந்தித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றிக்கு, #Dravidian Model 2.0வுக்கு ஆதரவு கேட்டு வருகிறேன். #வெல்வோம்_ஒன்றாக #VoteForDMK**



இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.